*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 333/2020***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PSE-3***

*Name / Father's Name:* ***திரு.ஞானராஜ் த/பெ. சபரிமுத்து***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **19.02.2026**

துவக்க நேரம் 03.45 A.N

**முதல் விசாரணை**

1) நான், கோயம்புத்துர் வனச்செயல் திட்ட அலுவலகத்தில் வனச்சரக அலுவராக பணிபுரிந்து வருகிறேன். நான், கல்வராயன் வனச்சரக அலுவலராக பணிபுரிந்தபோது கடந்த 08.04.2018 ம் தேதி அன்று அலுவலகத்தில் இருந்தபோது சுமார் 04.00 மணியளவில் எனக்கு கிடைத்த தகவலின் பேரில் பெரியகல்வராயன் பிரிவு கரியக்கோவில் சுற்று சூலாங்குறிச்சி பிளாக்5 காப்புக்காட்டு பகுதியில் தீ ஏற்பட்டுள்ளதாக கிடைத்த தகவலின் பேரில் நான் மற்றும் எனது தலைமையில் பீட் வனக்காப்பாளர் திரு.சண்முகம், அடியனூர் பீட் வனக்காப்பாளர் திரு.கிருஷ்ணராஜ் ஆகியோர்களுடன் சம்பவ இடத்திற்கு சென்றேன்.

2) அந்த பகுதியில் தீ ஏற்பட்டு புகை மூட்டமாக இருந்ததது. முதல் கட்ட நடவடிக்கையாக தீயை அணைத்து முற்றிலுமாக பார்த்துவிட்டு அந்த தீ இடத்தில் எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறாமல் பார்த்து சுமார் 07.00 வரை தீ முழுவதுமாக அணைத்துவிட்டு தீயை ஏற்படுத்திய நபர்கள் யார் என்பது குறித்து தெரியவேண்டும் என்பதற்காக அருகில் உள்ள கிராமமான தலைகரை ஊருக்கு சென்று அவ்வூர் பொதுமக்களிடம் விசாரணை செய்தோம்

3) அவ்விசாரணையில் தலைகரை கிராமத்தை சார்ந்த பவுல்தாஸ் மற்றும் பாக்கியராஜ் இருவரும் குற்றத்தில் ஈடுபட்டதாக தெரியவந்தது. எதிரிகள் அவ்வூரில் இல்லாத காரணத்தினால் திரும்ப தலைமை இடத்திற்கு வந்துவிட்டோம். மீண்டும், 11.04.2018 ம் தேதியன்று எதிரிகள் தலைகரை என்ற ஊரில் இருப்பதாக தகவல் வந்ததால் மாலை சுமார் 05.00 மணிக்கு மேற்கண்ட குழுவாகிய நாங்கள் தலைகரை என்ற ஊருக்கு சென்று எதிரிகளை பிடித்து விசாரணை செய்தோம்.

4) மேற்படி வழக்கின் எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் உடனடியாக அவர்களை வனச்சரக அலுவலகத்திற்கு அழைத்து வந்து மேல் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேலும், எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம், மகஜர் அறிக்கை, வனக்காப்பாளர் அறிக்கை, சம்பவ வரைபடம் மற்றும் புகைப்படம் ஆகியவை அறிக்கையாக பெறப்பட்டு தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு வனச்சட்டம் 1882 ஆக்ட் 5 (a), (d), (e) மற்றும் (g) பிரிவுகளின் கீழ் எதிரிகளை வனச்சரக அலுவராககிய நான் குற்ற அறிக்கை அ – படிவம் தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் எதிரிகளுக்கு எதிராக வழக்கு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது.

5) மேலும் சம்பவத்தின் GPS வரைபடம் துல்லியமான சுமார் 3.99 ஏக்கர் வனப்பகுதியில் அதில் உள்ள உயர்ந்த மரங்கள் மற்றும் வன உயிரினங்கள் எரிந்து மற்றும் அழிந்து சாம்பலாயின. எதிரிகள் மேற்கண்ட கடுமையான குற்றத்தின் செயலின் காரணத்தினால் அடைப்பு காவலில் வைப்பதற்கு நி.ஆ.கு.வ.7/2018 தயார் செய்து, மாவட்ட குற்றவியல் நடுவர் அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. **எதிரி பாக்கியராஜ் ஒப்புதல் வாக்குமூலம் அ.த.சா.ஆ.8 ஆகும்.**

**எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இவ்வழக்கில் அ–படிவத்தை தவிர வேறு எந்த ஆவணத்தையும் நான் தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம், மகஜர் மற்றும் வழக்கு இதர ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யபட்டதா என்றால் ஆமாம். எதிரிகளை எங்கு வைத்து கைது செய்தோம் என்றால் தலைகரை கிராமத்தில் வைத்து கைது செய்தோம்,

2) எதிரிகளை கைது செய்து, அலுவலகத்திற்கு அழைத்து வந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தோமா என்றால் ஆமாம். சந்தேக்த்தின் பேரில் தான் எதிரிகளை கைது செய்தோம். இவ்வழக்கு ஆவணங்களில் எதிரிகளை சந்தேகத்தின் பேரில் தான் கைது செய்தோம் என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு ஆவணங்கள் அனைத்தும் 11.04.2018 –ல் தயாரிக்கப்பட்டதா என்றால் சம்பவ இட புகைப்படம் 09.04.2018 தேதியில் எடுத்தோம். இதர ஆவணங்கள் அனைத்தும் 11.04.2018 ம் தேதியில் தயார் செய்தோம்.

3) சம்பவம் நடைபெற்ற இடம் எந்த சர்வே எண்ணில் நடைபெற்றது என்று வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் இல்லை, எங்களுக்கு GPS புகைப்படத்தின் மூலம் காப்பு காட்டின் நில எல்லைகள் தெளிவாக தெரியும் என்பதால் GPS புகைப்படத்தை ஒப்படைத்துள்ளோம். நாங்கள் ஒப்படைத்துள்ள GPS புகைப்படத்திற்கும், வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் இடத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

4) GPS புகைப்படத்தை தவிர சம்பவ இடத்தை ஊர்ஜிதம் செய்யும் விதமாக வேறு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. பீட் மேப் கொடுத்துள்ளோம். எங்களது வனத்துறை எங்களுக்கு

அதிகார பூர்வமாக கொடுக்கும் ஆவணம் என்பதால் அதை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோம். பீட் மேப் என்று சொல்லும் ஆவணத்தில் சர்வே எண் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அதில் சர்வே எண் வராது.

5) அரசு தரப்பு சான்றாவணம் 4–ஆனது சம்பவ இடத்திற்கு தொடர்புடைய ஆவணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. GPS மேப்பில் சம்பவம் நடைபெற்ற இடம் பற்றி தெளிவாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் அவ்வாறு குறியீடு செய்யப்பட்ட இடம் சம்பவ இடம் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. எதிரி பவுல்தாஸ் கொடுத்தாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தில் மாலை 05.00 மணி என்பது ஒயட்னர் வைத்து திருத்தம் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம்.

6) ஒப்புதல் வாக்குமூலத்தில் இன்று 08.04.2018 ம் அன்று மாலை 05.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணத்தை எழுதும் நபர் இன்று என்று எழுதுவது வழக்கம். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம், பார்வை மகஜர் ஆகியவைகளை ஒரு போதும் நாங்கள் பெறாமல் அலுவலகத்தில் வைத்து நாங்களாகவே தயாரித்ததால் தான் தேதியில் முரண்பாடு உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

7) வன அலுவலகர் அனைவரும் சேர்ந்து தான் தவறான ஆவணங்களை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கு சம்பவத்திற்கு தொடர்பு இல்லை என்று சொன்னாலும், காப்பு காட்டில் தீ பற்றி எரிந்தது சம்மந்தமாக எங்களது உயர் அதிகாரிகள் எங்களை கேள்வி பாப்பார்கள் என்பதற்காக இவ்வழக்கு சம்பவத்திற்கு தொடர்பில்லாத இந்த எதிரிகளை குற்றவாளிகளாக சேர்ந்து ஒரு வழக்கை தாக்கல் செய்து, அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8) எதிரிகள் ஒரு போதும் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்று சொன்னால் நாங்கள் எதிரிகளை கட்டாய படுத்தி, நாங்கள் தயாரித்து வைத்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொழுத்து பெற்றோம் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரிகளை 11.04.2018 அன்று தலைகரை கிராமத்தில் வைத்து கைது செய்தோம் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல.

9) எனக்கு கீழ் பணிபுரியும் வனக்காப்பாளர்கள் தயாரித்து வைத்திருந்த தவறான ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் அவர்கள் தயாரித்து வைத்திருந்து தவறான ஆவணங்களின் அடிப்படையில் எதிரிகளுக்கெதிராக அ–படிவம் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் நிரபராதிகள் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 04.20 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.02.19 18:50:16 +0530

Judicial Magistrate No.2, Attur.